சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08

ந.க.எண். 2626/ அ5/2021 நாள் 06.04.2022

பொருள் பள்ளிக் கல்வி - சென்னை மாவட்டம் - சென்னை-06, மேல்நிலை (முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு) / இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வு மே 2022 - குறைக்கப்பட்ட பாடத்திட்டம் - பாடங்களை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கக் கோருதல் - தொடர்பாக

பார்வை 1. சென்னை-06, அரசு தேர்வுகள் இயக்குநர் அவர்களின் ந.க.எண். 02/Conf./2022 நாள். 06.04.2022

பார்வையில் காணும் அரசு தேர்வுகள் இயக்குநரின் கடிதத்தின்படி, 2021-2022 ஆம் கல்வியாண்டிற்கான 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கான குறைக்கப்பட்ட பாடத்திட்டம் ஏற்கனவே அனைத்து பள்ளிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. குறைக்கப்பட்ட பாடத்திட்டம் சென்னை முதன்மைக் கல்வி அலுவலக இணையதளத்தில் (Edwizechennai.com) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. பொதுத் தேர்வுகள் இன்னும் 30 தினங்களில் தொடங்கவுள்ள நிலையில் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு குறைக்கப்பட்ட பாடத்திட்டத்தின்படி அனைத்து பாடங்களுக்கும் பாட ஆசிரியர்களால் பாடம் நடத்தப்பட்டு முடிக்கப்பட்டுள்ளதை அனைத்து பள்ளி தலைமையாசிரியர்கள்/முதல்வர்கள் உறுதிப்படுத்துமாறும் தேவைப்படின் சிறப்பு வகுப்புகள் நடத்தி விடுபட்ட பாடங்களை முடிக்குமாறும் தெரிவிக்கப்படுகிறது.

அரசுத் தேர்வுகள் துறை மூலம் வழங்கப்பட்டுள்ள தேர்வு கால அட்டவணையை பள்ளிகளில் உள்ள 10,11, மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களின் வகுப்பறைகளில் மாணவர்களின் கவனம் ஈர்க்கும் வகையில் ஒட்டி வைக்குமாறும் தலைமையாசிரியர்கள்/முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர்

சென்னை

பெறுநர்

1. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்
2. அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்கள், சென்னை மாவட்டம்.